
# மானுட வளர்ச்சியில் இலக்கிய, சமூகவியல் மற்றும் அறிவியலின் பங்களிப்பு

# ROLE OF LITERATURE, SOCIOLOGY AND SCIENCE IN THE DEVELOPMENT OF MANKIND

(INTERNATIONAL VIRTUAL CONFERENCE)

பதிப்பாசிரியர்கள்
முனைவர் ஆ. மகாலட்சுமி
முனைவர் க. மங்கையர்க்கரசி
முனைவர் இரா. இந்துமதி



தமிழ், வரலாறு மற்றும் வேதியியல் துறைகள்
நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி (தன்னாட்சி)
தேசிய மீள்தர மதிப்பீடு மற்றும் ஐ.எஸ்.ஓ. 9001 - 2015 தரச்சான்றிதழ் பெற்றது
90, பாலக்காடு ரோடு, பொள்ளாச்சி - 642 001

நூல்களைக் கற்கலாம், சொற்பொழிவுகளைக் கேட்கலாம், பல மணி நேரம் தொடர்ந்து பேசலாம், ஆனாலும் அனுபவமே சிறந்த ஆசான். அதுவே உண்மையான கல்வி.


- சுவாமி விவேகானந்தர்

*"The greatest glory in living lies not in never falling, but in rising every time we fall".*

***- Nelson Mandela***

*"Science knows no country, because knowledge belongs to humanity, and is the torch which illuminates the world".*

***- Louis Pasteur***





**நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி (தன்னாட்சி)**

தேசிய மீள்தர மதிப்பீடு மற்றும் ஐ.எஸ்.ஓ. 9001 – 2015 தரச்சான்றிதழ் பெற்றது

90, பாலக்காடு ரோடு, பொள்ளாச்சி – 642 001.

E-mail : ngm@ngmc.org Website : www.ngmc.org


₹ 350/-


9789382387145

பிரடாக் பிரிண்ட் 0422 2646036

# மானுட வளர்ச்சியில் இலக்கிய, சமூகவியல் மற்றும் அறிவியலின் பங்களிப்பு


| | | |
|---|---|---|
| பதிப்பாசிரியர்கள் | : | முனைவர் ஆ. மகாலட்சுமி<br>முனைவர் க. மங்கையர்க்கரசி<br>முனைவர் இரா. இந்துமதி |
| பதிப்புரிமை | : | பதிப்பாசிரியர்கள் |
| முதற்பதிப்பு | : | நவம்பர், 2020 |
| வெளியீடு | : | தமிழ், வரலாறு மற்றும் வேதியியல் துறைகள்<br>என்.ஜி.எம் கல்லூரி<br>பொள்ளாச்சி - 642 001. |
| கணினி | : | பிரடாக் பிரிண்ட், கோயம்புத்தூர் - 29. |
| அச்சாக்கம் | : | பிரடாக் பிரிண்ட்<br>476 பூமாதேவி கோவில் அருகில்<br>கவுண்டர் மில்ஸ் (அஞ்சல்)<br>கோயம்புத்தூர் - 29.<br>அலைபேசி : 98432 73994, 70920 92066 |
| பக்கங்கள் | : | XII + 246 = 258 |
| விலை | : | உரூ. 350/- |

ISBN : 978 - 93 - 82387- 14 - 5


# Role of Literature, Sociology and Science in the Development of Mankind


| | | |
|---|---|---|
| Editors | : | **Dr. A. Mahalakshmi**<br>**Dr. K. Mangayarkarasi**<br>**Dr. Indumathy Ramasamy** |
| Copyright's | : | Editors |
| First Edition | : | November, 2020 |
| Published | : | **Department of Tamil, History and Chemistry**<br>**N.G.M. College**<br>Pollachi - 642 001. |
| Computer | : | **Prdag Print**, Coimbatore - 29. |
| Printing at | : | **Prdag Print**<br>476, Near Boomadevi Kovil<br>G.N. Mills (Po), Coimbatore - 29.<br>Cell : 98432 73994, 70920 92066 |
| Pages | : | **XII + 246 = 258** |
| Prize | : | **Rs. 350/-** |

# 12 திருமந்திரத்தில் இறைப்பண்புகள்

முனைவர் ஆ. மகாலட்சுமி
தமிழ் உதவிப்பேராசிரியர்
என்.ஜி.எம்.கல்லூரி
பொள்ளாச்சி.

காலந்தோறும் தமிழுக்குப் பல வழிகளில் தொண்டு செய்து வரும் தமிழ் வல்லுநர்கள் பலரால் தமிழ், இன்றும் தன் சீரிளமைக் குன்றாமல் இன்றளவும் உள்ளது. அத்தகைய தமிழ்மொழி பக்தியால் வளர்ந்தது. பக்தி தமிழால் வளர்ந்தது. இதனையே தனிநாயக அடிகளார், 'ஆங்கிலம் வணிகத்தின் மொழியென்றும், கிரேக்கம் இசையின் மொழியென்றும், செருமன் தத்துவத்தின் மொழியென்றும், பிரெஞ்சு தூதின் மொழியென்றும், இத்தாலி காதலின் மொழியென்றும் கூறுவது ஒருபுடை ஒக்குமெனின் தமிழைப் பக்தியின் மொழியெனல் பொருந்தும் என்று பாராட்டுகின்றார். பாமர மக்களையும் பாராளும் மன்னனையும் பக்தி ஓர் இயக்கமாக ஈர்த்தது. பக்திப்பாடல்களின் உணர்ச்சிப் பெருக்கிலும் இசையிலும் மக்கள் கட்டுண்டு நின்றனர். அவ்வகையில் திருமந்திரத்தில் இறைவன்பால் மக்களை நெறிப்படுத்திய இறைப்பண்புகள் குறித்து இக்கட்டுரை எடுத்துரைக்கின்றது.

## திருமந்திரம்

சைவத்திருமுறை பன்னிரண்டனுள் பத்தாம் திருமுறையெனப் போற்றப்படும் திருமந்திரம் என்னும் நூலை அருளிச்செய்தப் பெருமைக்குரியவர் திருமூலநாயனாராவர். இவரை 'நம்பிரான் திருமூலன் அடியார்க்கும் அடியேன்' என நம்பியாரூரராகிய சுந்தரர் திருத்தொண்டத்தொகையில் பரவிப்போற்றியுள்ளார். இவரின் இயற்பெயரினைச் சுட்டும் போது, திருமூலரின் இயற்பெயர் சுந்தரநாதர் என்பதற்கு,

> ***'தந்திரம் ஒன்பது சார்வு மூவாயிரம்***
> ***சுந்தரன் ஆகமச் சொன் மொழிந்தானே'***

எனச்சிறப்புப் பாயிரச் செய்யுளைச் சான்று காட்டுவர். இது தந்திரம், மந்திரம், உபதேசம் என மூவகை உரையளவைகளை உறுப்பாகக் கொண்டது. இந்நூல் பொருள்தொடர்பு உடையதாய் மாலை போன்று அமைந்து இருப்பதால் இதனை **'முன்னிய அப்பொருண்மாலைத் தமிழ்மூவாயிரம்'** எனச்சேக்கிழார் குறித்துள்ளார். திருமந்திரம் மூவாயிரம் திருப்பாடல்களையுடையது என்பதையே, **'தந்திரம் ஒன்பது**

சார்வு மூவாயிரம்' (திருமந்திரம்:101) என்று திருமந்திரப் பாயிரத்திலும் **'முத்தி முடிவிது மூவாயிரத்திலே' (திருமந்திரம்:100)** என்று நூலின் முடிவிலும் வரும் பாடல் தொடர்களாலும் அறியப்படுகின்றது. ஒப்பற்ற சிறப்பினை உடைய திருமந்திரத்தில், திருமூலநாயனார் அவர்கள் இறைவனின் இயல்புகள் மிகுதியும் சுட்டிக்காட்டிச் செல்கின்றார். வாய்ப்பு கிட்டும் இடங்களிலெல்லாம் இறையியல்புகளைச் சுட்டிச் செல்லும் போக்கினைக் காணமுடிகின்றது.

எச்சமயத்தார்க்குமான பொதுவான நெறிகள் இதில் பேசப்படுகின்றன. இந்நூலின் பெருமையை ஔவையார்,

***'தேவர் குறளும் திருநான்மறைமுடிவும்***
***மூவர் தமிழும் முனிமொழியும் - கோவை***
***திருவாசகமும் திருமூலர் சொல்லும்***
***ஒருவாசகமென்றுஉணர்' (நல்வழி.40)***

என்று பாடுகிறார். இதில் ஔவையார் திருக்குறள், நான்மறை, தேவாரம், முனிமொழி, திருக்கோவையார், திருவாசகம், திருமூலரின் திருமந்திரம் இவையெல்லாம் உயரிய ஒத்த இணையிலாப் பொருள் ஒன்றையே குறிப்பன என்று எடுத்தோதுகிறார்.

## மூல முதல்வன்

இறைவன் ஆதியும் அந்தமும் இல்லாத மூலமுதல்வன். வேதங்களுக்கு எல்லாம் மறைபொருளானவன். எனவே அவன் 'மூலமுதல்வன்' எனச்சிறப்பாக அழைக்கப்படுகின்றான். அப்படிப்பட்டவன் மூங்கிலினுள் ஒளியுடைத் தீ எவ்வாறு மறைந்து நிற்குமோ அதுபோல ஆவியின் உடம்பகத்து உயிர்க்குயிராய்த் திருக்கோவில் கொண்டு விட்டுப்பிரியாக் குடியிருப்பாக உறைந்தருளும் தன்மையுடையவன். அவன் பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப்பரிவுடையவன். ஆருயிர்களின் மும்மலங்களை மாற்றியருள் செய்பவன். மேலும் ஒளியருளும் அறிவுப்பேரொளி என்றழைக்கப்படும் தயாவுடையவன். இக்கருத்தையே,

***'வேயின் எழுங்கனல் போலேஇம் மெய்யெனும்***
***கோயி லிருந்து குடிகொண்ட கோன்***
***தாயினும் மும்மலம் மாற்றித் தயா என்னுந்***
***தோயம தாய் .....' (திருமந்திரம்:160)***

எனும் வரிகள் உறுதிசெய்கின்றன.

மேலும், இறைவன் தத்துவங்ளைக் கடந்தவன். குற்றமற்றவன். பிறப்பு, இறப்பு, கேடு ஏதுமற்ற தன்மையன். அவன் உயிர்களுடன் உடன் உறைபவன். இதனையே,

***'ஒக்கநின் றானை உவப்பிலி தேவர்கள்'***
***(திருமந்திரம்:3)***

என்ற வரி இறைவன் அனைத்து உயிர்களிலும் வீற்றிருக்கின்றான் என்ற உண்மைத்தத்துவத்தைத் தெளிவுறுத்துகின்றது.

## நிகரற்றவன்

சிவபெருமானுக்கு இணையான ஒரு தெய்வத்தைத் தேடினாலும் கண்டறிய இயலாது. அவனுக்கு ஒப்பானவர் எவரும் இலர் என்றே கூறும் அளவிற்கு நிகரற்ற பெருமைக்குரியவன். இக்கருத்தையே,

**'சிவனொடொக் குந்தெய்வந் தேடினும் இல்லை**
**அவனொடொப் பார்இங்கு யாவரும் இல்லை'**
**(திருமந்திரம்:4)**

என்ற வரிகள் உறுதி செய்கின்றன. மேலும்,

**'தன்னையொப் பாயொன்றும் இல்லாத் தலைமகன்'**
**(திருமந்திரம்:6)**

என்ற வரியின் வழியும் இறைவன் தன்னிகரற்றவன் என்ற மெய்ம்மைக்கருத்து புலனாகின்றது. இத்தகைய சிறப்புடைய இறைவன் அனைத்துலகங்கட்கு அப்பாற்பட்டு பொன்போல் திகழும் செஞ்சடையுடன் விளங்கும் இயல்புடையவன்.

## தாயினும் இனியன்

நல்லோர்க்குப் புனலைவிடக் குளிர்ந்தவன். தீயோர்க்குத் தீயைக் காட்டிலும் மிகவும் வெம்மை உடையவன். தன்னை நாடி வரும் அன்பர்களுக்கு அணியனாய் நின்று நன்மைகள் பல புரிவதோடு, தன் சேய்க்குப் பாலை நினைந்தூட்டும் தாயினும் இனிமையுடையவன். தன்னை மறந்ததனால் தாழ் சடையோனாக காட்சியளிப்பதாக திருமந்திரம் சுட்டிக்காட்டுகின்றது. இவ்வாறு இறை இயல்புகளோடு இறைத்தோற்றச் சிறப்பும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. இதனை,

**'சேயினும் நல்லன் அணியன்நல அன்பர்க்குத்**
**தாயினும் நல்லன் தாழ்சடை யோனே' (திருமந்திரம்:7)**

என மெய்ப்பிக்கும் வகையில் திருமந்திரத்தின் வரிகள் அமைந்துள்ளன.

## கடந்து நின்றவன்

சிவபெருமான் மண்ணுலகத்தைக் கடந்து நிற்கும் இயல்பினன். மேலும் பிரம உலகமாகிய வியாழ அண்டத்தையும் (மலரோனாகிய ஆதியையும்) விண்டு உலகமாகிய செவ்வாய் அண்டத்தையும் (கடல் வண்ணனாகிய மாயனையும்) உருத்திரன் உலகமாகிய சுக்கிர அண்டத்தையும், மகேசன் உலகமாகிய புதன் அண்டத்தையும் கடந்து நிற்பவன். எனினும் எல்லாவற்றிலும் நீக்கமற நிறைந்து நிற்கும் இயல்பினையுடையவன். இதனை வலியுறுத்தும் விதமாக,

***'கடந்துநின் றான்கம லம்மல ராதி
கடந்துநின் றான் கடல் வண்ணன்எம் மாயன்
கடந்துநின் றான்அவர்க் கப்புறம் ஈசன்
கடந்துநின் றான்எங்கும் கண்டுநின் றானே'***
***(திருமந்திரம்:13)***

மேற்கண்ட பாடல்வரிகள் அமைந்துள்ளன.

## ஆட்கொண்டருள்பவன்

உலகங்களை என்றும் உடைமையாகவுடையவன் சிவன். எனவே அவன் 'மாயநல்நாடன்' எனச்சிறப்பாக அழைக்கப்படும் பண்புடையவன். ஒவ்வொருவர் மனத்திலும் எழுகின்ற எண்ணங்களை அறியும் பண்பினன். அவன் தன்னை மெய்யாய் நாடும் அன்பர் மனத்துத் தோன்றுபவன். தன்னை முழுமனதுடன் வேண்டி முத்திக் கரைசேர விரும்பி நிற்கும் அடியவர்க்கு அவரின் எண்ணப்படி அவரைச் சிறப்பாய் ஆட்கொண்டருளும் இயல்பினன். இக்கருத்தை,

***'மனத்தில் எழுகின்ற மாயநன் னாடன்
பிழைக்கநின் றார்பக்கம் பேணிநின் றானே'***
***(திருமந்திரம்:22)***

மேற்கண்ட பாடல் வரிகள் உறுதிபடுத்துகின்றன.

## பிறப்பு - இறப்பு அற்றவன்

இறைவன் என்றும் பிறப்பு இறப்பு அற்றவன். பின்னற்சடையினை உடையவன். என்றும் அழிவில்லாதவன். யாவருக்கும் குறைவில்லாத நிறைவான இன்பத்தையே அருளிச்செய்வதோடு அவர்களைவிட்டு என்றும் நீங்காது உறையும் பண்புடையவனாகத் திகழ்கின்றான். தன்னைத் தொழுதவர்களை மறவாது நினைக்கும் இயல்புடையவன். இக்கருத்தை,

***'பிறப்பிலி பிஞ்ஞகன் பேரரு ளாளன்
இறப்பிலி யாவர்க்கும் இன்பம் அருளும்
மறப்பிலி மாயா விருத்தமும் ஆமே' (திருமந்திரம்:25)***

எனவும்

***'பிறவா நெறிதந்த பேரரு ளாளான்'(திருமந்திரம்:1803)***

எனவும்

***'பிறப்பிலி நாதனைப் பேர் நந்தி தன்னைச்'***
***(திருமந்திரம்:86)***

எனவும்

***'இறப்பும் பிறப்பு மிருமையும் நீங்கித்
துறக்குந் தவங்கண்ட சோதிப் பிரானை'***
***(திருமந்திரம்:1614)***

என இறைவன் பிறப்பற்றவன் என்ற பண்பு திருமந்திரத்தால் இனிது புலனாகின்றது.

### மலம் அகற்றுபவன்

மனிதர்களின் மனங்களில் நீங்காது நிறைந்திருக்கும் ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களை அழித்தொழிக்கும் இயல்புடையவன் அருளோனாகிய சதாசிவன். ஞாயிற்றின் கதிரை ஏற்றுப்புறத்தே விடும் கல் 'சூரிய காந்தக்கல்' எனப்படும். அக்கல் சூரியன் முன்னன்றித் தன்னைச் சூழ்ந்துள்ள பஞ்சினைச் சுடமாட்டாது. அதற்குச் சுடும் ஆற்றலை நல்குவது ஞாயிறே ஆகும். எனினும் அச்சூரியனும் இக்கல்லின் வாயிலாகவே சுடும் பண்பினை உடையவன். அவ்வாறன்றி சுடான். அதுபோல மாந்தர்களின் மும்மலங்களை அகற்றச் சிவகுருவாய் வெளிப்படுபவன். அவன் மாந்தர்களை ஆட்கொள்ளும் போதே மும்மலங்களும் அற்றொழியும். இக்கருத்தையே திருமந்திரம்,

> ***'மலங்களைந் தாமென மாற்றி அருளித்***
> ***தலங்களைந் தானற் சதாசிவ மான' (திருமந்திரம்:162)***

எனவும்

> ***'சூரிய காந்தமுஞ் சூழ்பஞ்சும் போலவே***
> ***சூரிய காந்தஞ் சூழ்பஞ்சைச் சுட்டிடா***
> ***..... அற்ற மலங்களே' (திருமந்திரம்:161)***

என உவமையுடன் எடுத்தியம்புகின்றது.

### நல்வழியில் நடத்துவிப்பவன்

மாந்தர்கள் தங்களின் ஐம்புலன்களுடன் இணைந்து சிற்றறிவின் இயக்கத்திற்கிணங்க செயல்படும் பண்பினர். அப்பண்பினர் பல வேளைகளில் எல்லை காணஇயலாத ஆழத்தையுடைய நீர்நிலைகளில் இறங்கி கரையேறும் வழி அறியாது விழிக்கும் இயல்பினராகக் காணப்படுவர். அவர்கள் தங்களின் சிற்றறிவு இயற்கைப் பேரறிவில் அடங்கியது போல எண்ணி மயங்கும் இயல்பினர். அவர்களின் மயக்கத்தை அகற்றி நல்வழியை அறிவித்து நடத்துவிக்கும் இயல்புடையவன் இறைவன்.

> ***'அறிவைம் புலனுட னேநான்ற தாகி***
> ***நெறியி யாதுற்ற நீராழம் போல***
> ***அறிவறி வுள்ளே அழிந்தது போல' (திருமந்திரம்:161)***

எனத்திருமந்திரம் இறைவனின் பண்புகளை எடுத்துரைக்கின்றது. இறைவனின் இயல்புகளை மாந்தர்கள் வாழ்வில் கடைபிடித்தொழுகும் போது வாழ்க்கை சீர்மை நிறைந்ததாகக் காணப்படும்.

### மாறா நிலையுடையவன்

இவ்வுலகில் அனைத்தும் அழிந்து மறையும் இயல்புடையது. ஆனால் என்றும் அழியாத பண்பினை உடையவன் இறைவன் மட்டுமே. எனவே தான் அவன் மாறா நிலையுடையன் எனச் சிறப்பிக்கப் படுகின்றான். இளமைக் காலத்தில் அறிவு, ஆற்றல், ஆள்வினையுடைமை போன்ற பண்புகள் தளர்ச்சியின்றிக் கிளர்ச்சியாக இருக்கும். அப்பருவமே இறைவனைத் தொழுதற்கு வாய்ப்புடைய ஏற்ற காலம். அதனை விடுத்து, வயது சென்ற பின்னர் இறைவனைத் தேடி வழிபட்டுக் கொள்ளலாம் என்ற எண்ணத்தில், இளமைக்காலத்தை வீணடித்து விட்டு காலம் கடந்தபின்னர் அதனைச் செய்ய முற்படுவதைத் தவிர்ப்பது சாலச்சிறந்தது என்ற கருத்தை வலியுறுத்தும் போது, ஈசன் மாறா நிலையுடையனாய் நிற்பவன் என்ற இயல்பு சுட்டப்படுகின்றது. இதனை,

*'நிற்கின்ற போதே நிலையுடை யான்கழல்
கற்கின்ற செய்மின் கழிந்தறும் பாவங்கள்'*
*(திருமந்திரம்:279)*

எனத்திருமந்திரம் உணர்த்துகின்றது.

### பற்றற்றவன்

எதன் மீதும் பற்று அற்றவன் ஈசன். எனவே அவனைப் பற்றிலான் என அழைப்பர். அப்படிப்பட்ட இறைவனை, மாந்தர்கள் தங்களின் தூய உள்ளத்தால் ஒன்றினைப் பற்றவேண்டுமெனில் பெரும் பொருளாய்ச் செம்பொருளாய் அரும்பொருளாய் அன்பர் உள்ளத்து வரும் பொருளாய் விளங்கும் சிவபெருமானின் திருவடியினைப் பற்றுதல் வேண்டும். பற்று அற்றவனின் மேல் பற்றினைச் செலுத்தும் போது, அனைத்தும் எளிதில் இனிதாய் முற்றுப்பெறும். இதனை,

*'பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு' (குறள்:350)*

என்ற திருக்குறள் கருத்து திருமந்திரக் கருத்தை அடியொற்றி அரண் செய்வதைக் காணமுடிகின்றது. இதனையே 'திருமூலநாயனார் அருளிய திருமந்திரமாலையில் தெய்வப்புலவர் திருவள்ளுவர் அருளிய திருக்குறளிலுள்ள சொற்றொடர்களும் கருத்துக்களும் ஆங்கு ஆங்கே இடம்பெற்றுள்ளன' என்ற கூற்று மெய்ப்பிக்கின்றது. திருக்குறள் கருத்தை அடியொற்றி திருமந்திரமும்,

*'பற்றது பற்றிற் பரமனைப் பற்றுமின்
முற்றது எல்லா முதல்வன் அருள்பெறில்'*
*(திருமந்திரம்:285)*

எனவும்

'பற்றற் றவர் பற்றி நின்ற பரம்பொருள்'
(திருமந்திரம்:350)

எனவே அழியக்கூடிய உலகப்பற்றினை விடுத்து என்றும் அழியாத பற்றற்ற பண்பிலாளன் மேல் நமது பற்றினைச் செலுத்துதல் மாண்புடையதாகும் என்ற கருத்து பெறப்பட்டது. எனவே மாந்தர்கள் உலகப்பற்றினை அறுக்க வேண்டும் என்ற உயரிய கருத்து திருமந்திரத்தில் வலியுறுத்தப் பட்டதோடு, இறைவன் பற்றற்றவன் என்ற கருத்தும் புலனாகின்றது.

## முடிவுகள்

- திருமூல நாயனார் திருமந்திரத்தின் வாயிலாக இறையின் இயல்புகளை ஆங்காங்கே சுட்டிக்காட்டும் போக்குக் காணப்படுகின்றது. இறையின் இயல்புகளை எடுத்துரைக்க மறக்காத திருமந்திரம், நல்வழியில் நடத்துவிப்பவன், பற்றற்றவன், மாறாதன்மையை உடையவன், தாயினும் இனியன், அருள் செய்பவன் போன்ற இறைப்பண்புகளை மனிதனும் கைக்கொள்ளல் வேண்டும் எனவும் வலியுறுத்துகின்றது.
- மக்களின் நலன்பொருட்டு அவர்களின் பாவச்செயல்களை மன்னித்து ஆட்கொண்டருள்பவனாகவும், மாந்தர்களின் மனங்களில் இருக்கக் கூடியதான மும்மலங்களான ஆணவம், கன்மம், மாயை ஆகியவற்றை அகற்றும் இயல்பினைக் கொண்டவனாகவும் திகழ்கின்றான் எனத்திருமந்திரம் இறைவனின் இயல்புகளை வெளிப்படுத்துகின்றது.